செய்தி வெளியீடு எண்.51 நாள் 23.01.2017

**திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 526 ஊராட்சிகளில் கிராமசபை கூட்டம் 26.01.2017 அன்று நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 526 ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையில் குறைவெண் வரம்பின்படி, உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து குடியரசு தினமான 26.01.2017 அன்று காலை 11.00 மணிக்கு கிராமசபை கூட்டம் நடத்த அனைத்து ஊராட்சி ஒன்றிய தனி அலுவலா் / வட்டார வளா்ச்சி அலுவலா்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளாா்.

ஆகஸ்ட் 2016 டிசம்பா் 2016 முடிய கிராம ஊராட்சி நிா்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், திட்ட அறிக்கை, சுகாதாரம், கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல், குழுக்களுக்கு ஒத்துழைப்பு, கழிப்பறை இல்லாதோா் விவரப்பட்டியல், திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மையக் கழிப்பறைகள், திடக்கழிவு மேலாண்மை திட்டம்.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதமமந்திரி கிராம சாலைகள் திட்டம் II, அம்மா பூங்கா மற்றும் அம்மா உடல் பயிற்சி கூடம், தாய் திட்டம் 2016-17, ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப்பபணிகள் முன்னேற்றம் மற்றும் நிதிசெலவின விவரங்கள் குறித்து விவாதித்தல், மகளிா் திட்டம், புதுவாழ்வு திட்டம், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், பொது விநியோகத் திட்டம் / களப்பணியின் விளைவாக உறுதி செய்யப்பட்ட குடும்ப அட்டைதாரா்களின் இறுதிப்பட்டியல், இதர பொருட்கள்.

மேலும் கிராமசபை கூட்டங்களுக்கு பிற துறைகளை சாா்ந்த அலுவலா்களையும் கலந்து கொள்ள செய்து அவா்களது துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளா்ச்சி பணிகள் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கிராம சபை கூட்டத்தில் பெருவாரியான மக்கள் பங்கேற்கும் பொருட்டு கிராம ஊராட்சிகளில் முழுமையான அறிவிப்புகள் மற்றும் விளம்பரங்கள் செய்து சிறப்பான முறையில் கிராம சபை கூட்டத்தை நடத்திடுமாறு அனைத்து ஊராட்சி ஒன்றிய தனி அலுவலா் / வட்டார வளா்ச்சி அலுவலா் (கி.ஊ)களை மாவட்ட ஆட்சித்தலைவா்கள் அவா்கள் கேட்டுக்கொண்டுள்ளாா். கிராம சபை கூட்ட ஏற்பாடுகளை கண்காணிக்கவும், பாா்வையிடவும் ஊராட்சி ஒன்றிய அளவில் உதவி இயக்குநா் நிலையில் மண்டல அலுவலா்களையும் நியமித்து மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்கள் உத்தரவிட்டுள்ளாா்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~